## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## இரண்டாம் பத்து

### இரண்டாம் திருமொழி - காசையாடை
### திருவெவ்வுளூர்

** காசை ஆடை மூடி ஓடிக் * காதல் செய்தான் அவன் ஊர் *
நாசமாக நம்ப வல்ல * நம்பி நம்பெருமான் **
வேயின் அன்ன தோள் மடவார் * வெண்ணெய் உண்டான் இவன் என்று *
ஏச நின்ற எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 1

தையலாள் மேல் காதல் செய்த * தானவன் வாள் அரக்கன் *
பொய் இலாத பொன் முடிகள் * ஒன்பதோடு ஒன்றும் ** அன்று
செய்த வெம்போர் தன்னில் * அங்கோர் செஞ்சரத்தால் உருள *
எய்த எந்தை எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 2

முன்னோர் தூது * வானரத்தின் வாயில் மொழிந்து * அரக்கன்
மன்னூர் தன்னை * வாளியினால் மாள முனிந்து ** அவனே
பின்னோர் தூது * ஆதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார் *
இன்னார் தூதன் என நின்றான் * எவ்வுள் கிடந்தானே 3

பந்தணைந்த மெல்விரலாள் * பாவை தன் காரணத்தால் *
வெந்திறல் ஏறு ஏழும் * வென்ற வேந்தன் விரிபுகழ் சேர் **
நந்தன் மைந்தனாக ஆகும் * நம்பி நம்பெருமான் *
எந்தை தந்தை தம் பெருமான் * எவ்வுள் கிடந்தானே 4

பாலனாகி ஞாலம் ஏழும் உண்டு * பண்டு ஆலிலை மேல் *
சால நாளும் பள்ளி கொள்ளும் * தாமரைக் கண்ணன் எண்ணில் **
நீலமார் வண்டுண்டு வாழும் * நெய்தல் அந்தண் கழனி *
ஏல நாறும் பைம்புறவில் * எவ்வுள் கிடந்தானே 5

சோத்த நம்பி என்று * தொண்டர் மிண்டித் தொடர்ந்து அழைக்கும் *
ஆத்த நம்பி செங்கண் நம்பி * ஆகிலும் தேவர்க்கு எல்லாம் **
மூத்த நம்பி முக்கணம்பி என்று * முனிவர் தொழுது
ஏத்தும் * நம்பி எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 6

திங்கள் அப்பு வான் எரி காலாகி * திசை முகனார் *
தங்கள் அப்பன் சாமி அப்பன் * பாகத்து இருந்த ** வண்டுண்
தொங்கல் அப்பு நீள்முடியான் * சூழ் கழல் சூட நின்ற *
எங்கள் அப்பன் எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 7

முனிவன் மூர்த்தி மூவராகி * வேதம் விரித்து உரைத்த
புனிதன் * பூவை வண்ணன் அண்ணல் * புண்ணியன் விண்ணவர் கோன் **
தனியன் சேயன் தான் ஒருவன் ஆகிலும் * தன் அடியார்க்கு
இனியன் * எந்தை எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 8

பந்திருக்கும் மெல்விரலாள் * பாவை பனிமலராள் *
வந்திருக்கும் மார்வன் * நீலமேனி மணிவண்ணன் **
அந்தரத்தில் வாழும் * வானோர் நாயகனாய் அமைந்த *
இந்திரற்கும் தம் பெருமான் * எவ்வுள் கிடந்தானே 9

** இண்டை கொண்டு தொண்டர் ஏத்த * எவ்வுள் கிடந்தானை *
வண்டு பாடும் பைம்புறவின் * மங்கையர் கோன் கலியன் **
கொண்ட சீரால் தண்தமிழ் செய் மாலை * ஈரைந்தும் வல்லார் *
அண்டம் ஆள்வது ஆணை * அன்றேல் ஆள்வர் அமருலகே 10

**அடிவரவு:** காசையாடை தையலாள் முன் பந்தணைந்த பாலன் சோத்தம் திங்கள் முனிவன் பந்திருக்கும் இண்டை வில்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**